# ரோஜா



விலை 40 சதம்

நிர்வாக ஆசிரியர்:— எம். எஸ். எம். மபாஹிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஜா

('ஈழத்தின் கலை இலக்கியத் துறையிலே புதுமைப் பொலிவோடு புது நடைபோட மலர்ந்திருக்கும் திங்களிதழ்)

## நாம் பேசுகிறோம்.

சுகந்தம் நல்கும் 'ரோஜா' சுணங்கிவிட்டதே என முணங்கி எழுதிய வாசகர் பலருக்கும் பக்குவமான ஒரு பதிலைப் பகர வேண்டிய கடமையை நாம் மறப்பதற்கில்லை.

'ரோஜா' மலர் மக்களுடையது. மக்கள் மனதைப் பரவசப் படுத்துவது அதன் கடமை. கடமையில் தவறிவிடக் கூடாது என்பதற்கு, 'ரோஜா' வைக் கையிலெடுத்து களிப் புறும் நேயர்களின் கருத்துக்களை அறிய வேண்டும், அறிந்து தேவைக்குரிய சேவை புரிய வேண்டும், என்பதில் ஈடுபட்ட காரணத்தால், மலர் விரியத் தாமதித்தாலும், பலர் அறிய விரும்பிய கருத்துக்களை வளர்ப்பதற்கு வழி வகுத்து விட்டோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஏடுகள் சில ஊருக்கு உபதேசிகளாக உலாப் பாடி வருகிறதே ஒழிய, வளரும் எழுத்தாளர்களை வகையோடு முன்னேற்றும் இலட்சியத்துக்காக இயங்க மறந்திருப்பதும் கண்கூடு 'கண்ணார்மகன்தான் கலெக்டர் ஆகலாம், வண்ணார் மகன்தான் வக்கீலாகலாம்' என்ற போக்கில், உள்ளவனின் விடயங்களை மட்டும் பிரசுரிப்பதற்கு, தங்கள் ஏடுகளில் இடத்தைத் தள்ளி வைக்கும் இந்த ஏடுகள் வளரும் எழுத்தாளர்களை நிந்திக்கின்றன, அந்த நிந்தனை தர்ன் நமது சிந்தனையைக்கிளறி 'ரோஜா' வை உங்கட்குத் தந்தது. விழிபழுதான அந்த ஏடுகளைப் பழிவாங்கத் துடித்த பால்ய எழுத்தாளர்களின் படையல்களை மக்கட்குப் படைக்கவே 'ரோஜா' மலர்ந்து விட்டது. காவடிதூக்கும் கதிரவேலானாலும் சரி, காசாப்புக் கடை காதர் ஆனாலும் சரி, விடயதானம் நமக்கு அனுப்பினால், கடமையைக் கருதி, கட்டுப்பாட்டை எண்ணி, கண்ணியத்தை நிலை நிறுத்தி, கொள்கையைச் செய்யத்தான் போகிறது உங்கள் 'ரோஜா.' கொள்கைக்காக உயிரை பணயம் வைக்கும் குறிக்கோள் கொண்டதே உங்கள் 'ரோஜா'.

வாடைக் காற்றால் ஏற் பட்ட வடுக்களாலும், விஷப்பூச்சிகளால் ஏற்பட்ட விஷத்தாலும், வாழ வேண்டிய எழுத்தாளர்கள் வீழ்ந்தனர் என்ற நிலை இருக்கக்கூடாது என்பதை இலட்சியமாகக் கொண்டு விட்டது 'ரோஜா' என்றால், உவகையுடன் இதயம் மலர்ந்த 'ராஜா' வாகி விட்டார்கள் எமது வாசகர்கள் என்பதே பொருள். கடமையை மறைப்பதற்குக் களம் அமைக்கும் தன்மையைத் தட்டி எறிந்து விட்ட இந்த 'ரோஜா' வை இலேசாக இனி யாரும் எடுத்து முகரலாம் - முகருங்கள், முகம் மலருங்கள், அகம் புலருங்கள்

வணக்கம்

---

ரோஜாவில் வெளிவரும் கதைகள், கவிதைகளிலுள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே. கட்டுரைகளில் தெரிவிக்கப் பட்டிருக்கும் கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன். எஸ்.பேரின்பநாயகம்
மட்டு நகர்

# பெரியோர் வாழ்விலே.....

(மனிதன் பிறக்கும் போது புகழ் அடைவதில்லை. தன்னுடைய முயற்சியினாலும் அறிவினாலும் ஒழுக்கத்தாலும், தன்னம்பிக்கையாலும் முன்னுக்கு வந்து, ஊரறிய, உலகறிய புகழ் பெறுவான். பெரியோர்களது பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகள் மிகவும் சுவையானது. அவற்றைத் தெரிந்து கொள்ளுவதால் எம்மிடையே ஒரு புகழ் தென்பும், மனமகிழ்ச்சியும், முன்னேற விருப்பும் உண்டாகின்றன.)

இத்தாலி தேசத்திலே 'பைசா' என்ற ஒரு நகரம் உண்டு. அந்த நகரத்தில் பிரசித்தமான ஒரு மாதா கோயில் அந்த மாதா கோயிலில் அன்று ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்களை மூடிக் கடவுளை நோக்கி ஜெபித்துக் கொண்டிருந்தனர். ஆனால் அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு மாணவன் மட்டும் கண்களை மூடாமல் மேல் கூரையில் சங்கிலியால் கட்டித் தொங்கவிடப்பட்ட கண்ணாடி விளக்கின் அசைவை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். வேகமாகக் காற்று அடிக்கும் போது அந்த விளக்கு அதிக தூரம் போய் வரும், மெதுவாகக் காற்று அடிக்கும் போது, குறைந்தளவு தூரம் போய் வரும். அந்த விளக்கு ஒரு முறை இந்தப் பக்கத்திலிருந்து அந்தப் பக்கத்திற்குப் போவதற்கு எவ்வளவு நேரமாகிறது என்று அந்த மாணவன் கணக்கிட்டுக் கொண்டிருந்தான். இறுதியில் வெற்றியும் பெற்றான்.

அந்தப் பையன் இதை எப்படி கணக்கிட்டான் எனின், வைத்தியர்கள் நாடி பார்ப்பது போல், தன் இடது கையில் வலது கை விரலை வைத்து நாடித் துடிப்பின் மூலம் கணக்கிட்டான் அதிக தூரம் போய் வர அந்த விளக்கு எவ்வளவு நேரம் எடுக்கின்றதோ, அதேயளவு நேரம் தான், அது குறைந்த தூரம் போய் வர எடுக்கின்றது என்று கண்டு கொண்டான்

முந்நூறு ஆண்டுகட்கு முன்பு காலத்தை அறியக் கடிகாரங்கள் இல்லை, மாதா கோயிலில் விளக்கு அசைந்ததைப் போலத்தான் கடிகாரங்களிலுள்ள 'பெண்டுலம்' அசைகிறது என்பதை அவன் கண்டு கொண்டான். அந்த மாணவன் கண்டு கொண்ட உண்மையை அடிப்படையாக வைத்தே கடிகாரங்கள் செய்யப்பட்டன.

அந்த மாணவனுடைய குடும்பமோ பரம ஏழை. ஏழையாயிருந்தாலும் அவன் மிகவும் புத்திசாலி. சிறு வயதிலேயே அவன் சிறு சிறு கருவிகளைச் செய்து தன் சக மாணவர்கட்கும் வித்தை செய்து காட்டுவான். அவன் நல்லதொரு பாடகன், அவன் பாடகன் மட்டுமல்ல, ஓவியம் வரைவதிலும் கெட்டிக்காரன். அவன் எவர் எதைச் சொன்னாலும் நம்பிவிடமாட்டான், எல்லாவற்றையும் ஆராய்ந்து பார்த்தே நம்ப முயல்வான், இதனால் அவனுடைய நண்பர்களுடன் அவனுக்கு அடிக்கடி சண்டை ஏற்படும். இதனால் எல்லோரும் அவனை சண்டைக்காரன் என்றே அழைத்தனர்.

அந்த சண்டைக்காரன் தான், வானத்தைப் பார்க்கக் கூடிய 'தொலை நோக்கி' யைக் கண்டு பிடித்தான். காண முடியாத வானக் காட்சிகளை எல்லாம் தான் கண்டு பிடித்த கருவியின் மூலம் பிறருக்கு காட்டினான். அவன் தொலை நோக்கி என்று சொல்லப்படுகின்ற 'டெலிஸ் கோப்பை' மட்டும் கண்டு பிடிப்பதோடு நிற்கவில்லை, வெப்பமானியையும் கண்டு பிடித்தான்.



சூரியன் பூமியைச் சுற்றி வருகின்றது என்றே பெரும்பாலானோர் முன்பு நம்பினர் அது தவறு, பூமிதான் சூரியனைச் சுற்றி வருகின்றது என்னும் பேருண்மையை பல ஆதாரங்களுடன் நிரூபித்தான். புத்தகங்களில் விளக்கவுரைகள் எழுதினான். மதக் கொள்கைகளுக்கு எதிராக இவன் பேசுகின்றான், எழுதுகின்றான் என்று கூறி அவனைப் பிடித்து சிறையிலடைத்தனர். அவன் சிறையிலிருந்து விடுதலை யாகியதும், தான் கண்டு பிடித்த விஞ்ஞான உண்மைகளை விளக்கி பல நூல்களை எழுதினான்.

காண முடியாத வானக் காட்சிகளை யெல்லாம் காண்பதற்கு வழி காட்டிய அந்த விஞ்ஞானி தன்னுடைய எழுபத்திமூன்றாவது வயதில் எதிரில் இருப்பதைக் கூட பாாக்க முடியாத குருடனானான். கண் பார்வை இழந்த ஐந்து ஆண்டுகளில் அவன் இவ்வுலக வாழ்வை முடித்துக்கொண்டான். இப்படியாக மற்றவர்களால் சண்டைக்காரன் என்று இகழப்பட்ட அவன் வேறு யாருமல்ல, விஞ்ஞானத்தின் வித்து, ஆராய்ச்சியின் ஆரம்பச் சோதனை முறைக்கு ஆதாரம், வானநூலுக்கு கண்ணும் ஒளியும் அளித்த தனி வள்ளல் என்று எல்லோராலும் தற்போது புகழப்படும் விஞ்ஞானி கலிலியோ கலிலீ தான் அன்று அந்த மாதா கோயிலில் அந்த அசையும் விளக்கைப் பார்த்து பல உண்மைகளை கண்டு பிடித்தவன்.

## திரைப்படம் - நடிகர் தெரிவு

1971 ம் ஆண்டில் இலங்கையில் திரையிடப்பட்ட தென்இந்திய தமிழ்ப் படங்களின் சிறந்த படம், நடிகர், நடிகை ''ரோஜா'' வாசகர்களிட மிருந்து தெரிந்தெடுக்கப்படும்.

கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள பத்திரத்தை நிறப்பி 25 சத முத்திரையுடன் அனுப்பப்படல் வேண்டும். நேயர்களின் விருப்பத்திற் கேற்ப முதலாவதாகத் தெரிந்தெடுக்கப்படும் திரைப்படம், நடிகர், நடிகையை எமக்கு சரியாகக் குறித்து அனுப்பிய முதலாவது வாசகர்கட்கு ரூபா 50 பரிசளிக்கப்படும்.

அடுத்த இதழில் முடிவு வெளியிடப்படும்.

## திரைப்படம் - நடிகர் தெரிவு

சிறந்த படம் :.................................................................

சிறந்த நடிகர்:.................................................................

(படத்தையும் குறிப்பிடவும்)

சிறந்த நடிகை:.................................................................

(படத்தையும் குறிப்பிடவும்)

பெயர்:.................................................................

விலாசம்:.................................................................

.................................................................

.................................................................

கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேட்டி கண்டவர்
|
ஜே. பீ. ஆர்.

# சினிமாவில் நடிக்க ஆசைப்பட்ட பாண்டியன் டைரக்டரானார்

மலையகத்தைச் சேர்ந்த பாண்டியன் மாத்தளை பாக்கிய வித்தியாலயத்தினதும் விஜயா கல்லூரியினதும் மாத்தளை அரசாங்க கல்லூரியினதும் பழைய மாணவராவர். கல்லூரியில் படிக்கும் காலத்தில் பலருடன் குத்துச்சண்டை (Boxing) செய்து பல பரிசுகளும் பெற்று இருக்கிறார்.

திரு. பாண்டியனை என் நண்பர் திரு. எஸ். பேரம்பலம் அவர்கள் எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். நீங்கள் எப்படி சினிமா உலகத்திற்கு நுழைந்தீர்கள் என்று நான் அவரிடம் கேட்ட போது அவர் சொன்னார்:-

நான் படிக்கும் போதே' சினிமாவில் நடித்து ஒரு பெரிய நடிகனாக பெயர் எடுக்க வேண்டும் என்று ஆசை வளர்ந்துக் கொண்டே வந்தது. கல்லூரியில் இருந்து விலகியபின் ஒரு நாள், சினிமாவில் நடிக்க நடிகர்கள் தேவை என்ற ஒரு விளம்பரத்தை பத்திரிகையில் பார்த்து டனே என் புகைபடத்துடன் விண்ணப்பம் செய்தேன் என் விண்ணப்பத்தை பார்த்த அப் படத் தயாரிப்பாளர் என்னை குருநாகலைக்கு நேரில் வந்து சந்திக்கும்படி கடிதம் எழுதியிருந்தார். அக்கடிதத்தைக் கண்ட நான் மிக சந்தோஷத்துடன் குருநாகலைக்குச் சென்றேன். அப்படத்தயாரிப்பாளர் என்னிடம் சில கேள்விகளை கேட்டு எழுதிக்கொண்டு இறு நூற்று ஐம்பது ரூபாய் கட்ட வேண்டும் அப்போது தான் சினிமாவில் நடிக்க சந்தர்ப்பம் கொடுக்க முடியும் என்று சொன்னார். இவ்விஷயத்தை என் தந்தையிடம் கூறி பணம் கேட்ட போது அவர் பணம் கொடுக்க மறுத்து விட்டார். நான் சினிமா ஆசையிலேயே இருப்பதை அறிந்த என் தாயார் என் ஆசையைப் பற்றி எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த திரு. எஸ். எம். நாயகம் அவர்களின் அக்காவிடம் சொன்னார். அவர் ஒரு கடிதம் எழுதி கந்தானை ஸ்ரீ முருகன் நவ கலாவிலிருக்கும் அவரின் அண்ணன் எஸ். எம். நாயகம் அவர்களிடம் போய் கொடுக்கச் சொன்னார். கடிதத்தைப்பார்த்த நாயகம் அவர்கள் என்னை (Laboratory) லெபோரிட்டியில் சம்பளம் இல்லாமல் வேலை செய்யும் படி சொன்னார். நடிக்க சந்தர்ப்பம் இல்லாவிட்டாலும் ஸ்டூடியோவில் வேலை செய்வதற்காகிலும் சந்தர்ப்பம் கிடைத்தது பெரிய பாக்கியம் என்று கருதி அதற்கு உடன் பட்டேன், இது நடந்தது 1955 ம் ஆண்டு

கே:- அதன் பின் என்ன நடந்தது?

ப:- காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை லெபோரிட்டியில் வேலை செய்வேன். அதன்பின் எடிட்டிங் படிப்பதற்காக இரவு முழுதும் எடிட்டிங் அறைக்கு போய் வேலை செய்வேன். அப்போது அங்கு டைரக்டராகவும் எடிட்டிங் செய்பவராகவும் இருந்த திரு. எல். எஸ். ராமச்சந்திரன் எனக்கு எடிட்டிங் பற்றி நன்கு சொல்லிக் கொடுத்தார்.



# வாசகர் கருத்து

''ரோஜா'' மலர்ந்தது தான் தாமதம், அதன் மணம் வீசுவதற்கு முன்பே மக்கள் மனமுவந்து அதை அணைத்துக் கொண்டதைக் காணும் போது ஆச்சரியமும், ஆனந்தமும், கொள்ளாமல் எம்மால் இருக்க முடியவில்லை. வாழ்த்துக்கள் அனுப்பும் வாசகர்களின் கட்டுக்கட்டான கடிதங்கள் மட்டில்லாக் கணக்கில் நாள் தோறும் குவிந்தப்படியே இருக்கின்றன. அவை எல்லாவற்றையும் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துவதோடு, அன்பர்களின் ஆசி பல வற்றிக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், வாசகர்கள் தங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எழுதி யனுப்புமாறு அவர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி
ஆ – ர்

இன்பத் தமிழ் மணக்கும் ஈழ நாட்டின் தலை சிறந்த படைப்புகளில் ஒன்றான ''ரோஜா''வே நீ என்றென்றும் நறுமணத்துடன் வாசகர்களின் கையில் மலர்ந்து மாதத்துக்கொரு முறை இளம் எழுத்தாளர்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்ய வாழ்த்துகிறேன். தித்திக்கும் தேன் மொழியைச் சுமந்து வாசகர் இதயத்தில் நறுமணம் கமழும் ''ரோஜா''வே நூறாண்டு காலம் வாழ உனக்கு என் பசுமையான வாழ்த்துக்கள்.

எம். என். எம். பாறூக்
காலி.

''தென்றல்'' என்னும் நாடகம் இன்றைய சமுதாயத்துக்கு எடுத்து காட்டும் மிகச்சிறந்த படிப்பினையாக அமைந்து விட்டது. ''ரோஜா'' என்னும் மாத ஏடு வீறு நடை போட்டு மலர இறைவன் துணை புரியட்டும்.

ஏ. ஏ. எம். தாஸிம்
காலி.

''ரோஜா'' என்று பெயரிட்டு வாசகர்களாகிய எங்கள் கையிலே பூத்து குலுங்கும் ''ரோஜா''வே! நீ ஈழத்தில் தென் பகுதியில் இருந்து வருகிறாய் என்றதும் மேலும் மகிழ்ச்சியடைகின்றேன். மணம் கமழும் நல்ல மலராக நீ நீடூழிவாழவாழ்த்துகிறேன். உன்னை வெளியிடத் துணிந்த ஆசிரியருக்கு என் உள்ளம் கனிந்த வாழ்த்து

செல்வி. எம். டீ. ஸலாமத் ஸவ்தா
பேருவளை.

''ரோஜா'' இதழ் சுவைமிக்கதாய் இருந்தது. அட்டைப் படத்தை பார்த்ததும் எனக்கு நேருவின் ஞாபகம் தான் வந்தது.

எம். எஸ். பீ. ராதா
வளஹந்துவ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ரோஜா' இதழ் கண்டேன். அதன் நறுமணத்தை நுகர்ந்து இனிமையான அம்சங்களைச்சுவைத்து இன்புற்றேன். 'தென்றல்' நாடகம் பலே ஜோர். 'வாடா மலர்' சிறுகதை ரொம்பப் பிரமாதம். உண்மையிலேயே 'ரோஜா' ஒரு வாடா மலர் என்பது தான் என் கருத்து. அடுத்த 'ரோஜா' இதழில் இன்னும் பல சிறந்த அம்சங்கள் வெளி வரும் என்பதை யறிந்து மகிழ்ச்சியடைகிறேன். அத்தோடு முதல் முதலிலேயே அறிவுக்கு விருந்தாக போட்டி ஒன்றை ஆரம்பித்ததையிட்டு ஆசிரியரை பாராட்டுகிறேன்.

செல்வி. என். ஸபாயா ஸஹீட்
பேருவளை

இலக்கிய மாத இதழான 'ரோஜா' வின் முதல் இதழைக் கண்ணுற்றதும் பெருமகிழ்ச்சி. அதன் அட்டைப்படம் என்னை கவர்ந்தது மட்டுமல்லாமல் உள்ளே பொதிந்துள்ள விடயங்களும் கவர்ந்தன. ஆரம்பத்திலேயே 'ரோஜா' மணத்தோடு பணத்தையும் அளிப்பதற்காக வேண்டி 'அறிவுக்கு விருந்து' படைத்திருப்பது போற்றத்தக்கதாகும்.

'ரோஜா' வில் இடம்பெற்றுள்ள ஆசிச் செய்திகளில் சில ஆங்கிலத்திலேயே பிரசுரிக்கப் பட்டிருந்தது. இப்படிபட்ட விடயங்களில் தமிழ் மொழிப் பெயர்ப்பையும் சேர்த்து பிரசுரித்தால் ஆங்கிலம் கற்றறியாத அநேக வாசக அன்பர்களுக்கு விளங்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுகிறதல்லவா? தங்களின் இம் முயற்சிக்கு ஊக்க மளிக்க ஈழத்து எழுத்தாளர்கள் வாசக அன்பர்கள் முன் வருவார்கள் என நம்புகிறேன்.

வாழ்க 'ரோஜா'!
வளர்க 'ரோஜா' வின்பணி !!

எஸ். ஏ, நவாஸ்
கொழும்பு

அழகிய அட்டைப்படத்துடன் பல வர்ண எழுத்துக்களையும் தாங்கிவெளிவந்துள்ள 'ரோஜா' வுக்கு நல்ல தொரு எதிர்காலம் உண்டென எண்ண முடியும்

இனி வரும் 'ரோஜா' இதழ்களில் மாணவர்களுக்கென சொல்லாக்கப் போட்டி ஒன்றும், நகைச்சுவைப் பகுதி ஒன்றும், கேள்வி பதில், பெண்கள் பகுதி, ஆகியனவும் இடம் பெற்றால் வாசகர் தொகை இன்னுமதிகம் கூடும். 'ரோஜா' வின் கன்னியிதழில் பக்கங்களின் இலக்கங்கள் குறிக்கப்படாமை ஒரு குறையாகும். இளம் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தி, அவர்களின் விடயதானங்களுக்கு முக்கிய மதிப்பளிக்க வேண்டும். பிரசுரிக்கப்படும் ஒவ்வொரு விடயத்தையும் எழுதி அனுப்பியோருக்கு ஒவ்வொரு இதழ் இலவசமாகக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மாவட்ட மலர் வெளியிட வேண்டும் மாவட்ட மலர்களில் அந்தந்த மாவட்ட எழுத்தாளர்களின் படைப்புக்கள் இடம் பெறல் வேண்டும். 'ரோஜா' எண் திசையும் மணம் வீச வேண்டுமென வாழ்த்துகிறேன்.

பலப்பிட்டி - அருஸ்

இவ்வுலகமான பூந்தோட்டத்திலே, மலர்ந்து இருக்கும் எல்லா வகையான பூக்களையும் விட, காலி என்னும் பூந்தோட்டத்திலே புதிதாக வளர்ந்து வருகின்ற ''ரோஜா'' ஒரு தனிச் சிறப்பு வாய்ந்தது.

''ரோஜா'' மாதம் ஒரு முறை மலர்ந்தாலும் தெவிட்டாத தேன்துளி போல் இருக்கின்றது. இவ் ''ரோஜா'' எவ்விதக் குறையும் இன்றி, இப்பாரினில் நீடூழி வாழ என் பிரார்த்தனைகள். இதனைவெளியிட முயற்சி செய்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

செல்வி, சித்தி அன்வர்
தர்ஹா நகர்

அரும்பிக் கொண்டிருந்த 'ரோஜா' வின் மொட்ட விழ்ந்து அது இன்று மலர்ந்திருப்பதைக் காண மகிழ்ச்சி யடைந்தேன்.

'ரோஜா' மதிகள் தோறும் பொலிவுற்று பொழில் போல் திகழ வேண்டும் என்பதே என் அவா. பொழிக 'ரோஜா' பொழிவுடன் வளர்க 'ரோஜா'

ஐ. எல். எம். மூசின்
தர்ஹா நகர்.

''ரோஜா'' வின் மலர்ச்சியில் நம் போன்ற 'வாசக நேயர்கள்' பூரிப்படைகிறோம். நாளுக்கொரு மலராக மலர்ந்து மடியும் எத்தனை எத்தனை 'ரோஜா' களுக்கு மத்தியில் தனிக்காட்டு ரோஜாவாக நாட்டுக்கும், மக்கள் சமுதாயத்துக்கும் தொண்டு செய்ய வந்துள்ள 'ரோஜா' வே! உன்வரவு நல்வர வாகுக.

'ரோஜா' என்றும் மணம் கமழ நல் வாழ்த்துக்கள்

செல்வி. ஹபீளா எஸ். டீன்
காலி.

'ரோஜா' வை வாசித்து அக மகிழ்ந்தேன். முதல் இதழிலேயே அழகிய அட்டைப் படத்துடனும் அருமையான நாடக கதைகளுடனும் மலர்ந்தது. மென்மேலும் 'ரோஜா' பூத்துக் குலுங்கவும், நறுமணம் கமழவும், இன்னும் பல சுவை அம்சங்களுடன் திகழவும் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வேண்டுகிறேன்.

செல்வி. ஹன்சுல் அரிபா முகிதீன்
யாழ்ப்பாணம்

முதன் முறையாக வெளியிட்டிருக்கும் 'ரோஜா' இதழ் என் உள்ளத்தில் உவகை பொங்கச் செய்தது. அதன் கவர்ச்சி மிக்க அட்டை கண்ணை மிகவும் கவர்ந்திருக்கிறது. 'தென்றல்' நாடகமும் 'வாடாமலர்' சிறுகதையும் வெகு ஜோர். 'ரோஜா' வின் நறுமணம் ஈழம் முழுவதும் மணம் கமழ வேண்டும், இதுவே என் அவா

திருமதி. இராஜேஸ்வரி
சுப்பிரமணியம் - காலி

'எழுத்துக்குக் கூலி' என்ற குறுகிய மனப்பான்மையுடன் எழுதி வரும் தனிக் காட்டு ராஜாக்கள் 'ரோஜா' வின் மலர்ச்சி கண்டு தலை கவிழத்தான் வேண்டும். 'ரோஜா' பெரும் பிரசவ வேதனைகளுடன் தான் பிறந்திருக்க வேண்டும். பிறந்திருக்கும் 'ரோஜா' நமது நாட்டுச் செல்வம். அச் செல்வத்தை பேணி வளர்க்க வேண்டியது நமது கடமை. இனி 'ரோஜா' சிரமமின்றிக் கிரமமாக வெளிவந்து மணம் பரப்பித் தேசிய பூங்காவில் எழில் நிரப்பி நிற்குமென ஆசிக்கின்றேன்.

யாஸீன், காலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பெண்ணே !

மணமான புதுப்பெண்ணே!
இளமானே! என்கண்ணே! - முத்தே
மனதில்வை என் சொல்லை
வற்றாத வளமான சொத்தே!

★

துணைவனின் துணையோடு
தொடங்குகிறாய்ப் புத்தில்லம் - அன்புத்
துணைகொண்டால் வாழ்வினில்
தோய்ந்திடுமே இன்ப வெள்ளம்!

★

அத்தானின் தாய் தந்தை
புத்தில்லத் தாய் தந்தை! - போற்றே
அத்தையின் முன்னெழு!
ஆளன் குறிப்புணர்! ஊற்றே

★

சிரித்த முகத்தோடு
சிட்டுப்போல் வேலைகள் செய்வாய்!
உரித்த பலாச்சுளை
உரையாடல் என்றென்றும்
கொள்வாய்!

எத்தனை இன்னல்கள்
எதிர் எதிர் வந்தாலும் தள்ளு!
புத்தகம் போலிரு
பொறுமையும் அறிவும் மேற்கொள்ளு!

★

ஆளனுக்கேற்ற
அறிவுரை சொல்ல அஞ்சாதே!
கோளாறுக் கஞ்சிக்
குடித்தனம் செய்யக் கெஞ்சாதே!

★

வீட்டாரும் நாட்டாரும்
மெல்லிசை யாழே! - என் கண்ணே!
காட்டிப் புகழ்வதே
வீட்டுக் குடித்தனம் எண்ணே!

★ ★ ★

**மாணவர் உலகம்**

★

அ. தமிழ்ச்செல்வன்,
மல்ஹரஸுல்ஹியா
மகா வித்தியாலயம்
காலி



(4 ம் பக்கத் தொடர்ச்சி)

# சினிமாவில் நடிக்க....

அப்போது எனக்கு நடிகராக வேண்டும் என்ற இருந்த ஆசை குறைந்து ஒரு டைரக்டராக வேண்டும் என்ற ஆசை எழுந்தது. சில காலத்திற்குப்பின் திரு எல்.எஸ். ராமச்சந்திரன், திரு ஏ.எஸ். நாகராஜன், திரு ஏ. பி. ராஜ் ஆகியோருக்குக் கீழ் உதவி டைரக்டராக கடமை யாற்றினேன்.

கே:- ஒரு டைரக்டருக்கு எடிட்டிங் தெரிந்திருக்க வேண்டுமா?

ப:- அவசியம் தெரிந்திருக்க வேண்டும். எடிட்டிங் தெரிந்த டைரக்டரை ஏமாற்ற முடியாது. எடிட்டிங் மட்டுமல்ல சினிமா சம்பந்தப்பட்ட எல்லா விஷயங்களையும் ஓரளவு தெரிந்திருப்பது நல்லது.

கே;- எப்படி விஜயா ஸ்டுடியோவில் வந்து சேர்ந்தீர்கள்?

ப:- திரு நாயகம் அவர்களின் ஸ்டுடியோவில் வேலை நிறுத்தம் நடைபெற்றது, அப்போது இரு சாரார் பக்கமும் என்னால் சேர முடியாத நிலை ஏற்பட்ட படியால் என் ஊருக்குச் சென்றேன். 19[illegible]5ம் ஆண்டு விஜயா ஸ்டுடியோவுக்கு கெமரா மேதை மஸ்தான் தமிழகத்திலிருந்து வந்திருப்பதாக அறிந்து நான் நேரில் போய் அவரிடம் பேசினேன். அவர் என்னை உதவி டைரக்டராக வேலை செய்யச் சொன்னார். அச்சமயம் திரு எஸ் சிவானந்தனும் திரு ஈழத்துரத்தினமும் உதவி டைரக்டர்களாக இருந்தார்கள். அவர்கள் இருவரும் சென்றபின் நான் முதலாவது உதவி டைரக்டராக கடமையாற்றினேன். சினிமா நுணுக்கங்களை எல்லாம் எனக்கு சொல்லிக் கொடுத்த மஸ்தான் அவர்களை என்னால் மறக்க முடியாது. அவருக்கு நான் நன்றியுடையவனாக இருக்கிறேன்

கே:- நீங்கள் ஒரு படமும் டைரக்ட் பண்ண இல்லையா?

ப:- சினிமாத்துறையில் எல்லா விஷயங்களையும் ஓரளவு அறிந்து பதினான்கு ஆண்டுகளாக உதவி டைரக்டராக கடமையாற்றியும் எனக்கு ஒரு படமும் டைரக்ட் பண்ண சந்தர்ப்பம் கிடைக்காததால் மனம் சோர்வடைந்து இத்துறையை விட்டு விலகி செல்வதற்கு எண்ணியிருந்தேன். ஆனால், என் அன்பு மனைவி கமலாவின் வற்புறுத்தலின் பேரில் சில காலம் இருந்து பார்க்கலாம் என்று இருக்கும் போது சம்பத் பிலிம் ஸ்தாபனத்தார் ஒரு படத்தை டைரக்ட்பண்ணித்தரும்படி வந்து ஒப்பந்தம் செய்தார்கள்.

கே:- இப்படம் வெளிவந்து விட்டதா?

ப:- கூடிய விரைவில் வெளிவரும்.

கே:- நீங்கள் விஜயா ஸ்டுடியோவில் கடமை யாற்றிக் கொண்டு பிறருடைய படங்களை டைரக்ட் பண்ணுவதற்கு அனுமதி இருக்கிறதா?

ப:- விஜயா ஸ்டுடியோ அதிபர் திரு கே. குணரத்தினம் நல்லெண்ணம் படைத்தவர். தொழிலாளர் முன்னேற்றத்திற்கு தடைவிதிக்கும் பண்பு கொண்டவரல்ல. அவரின் உதவியால் எத்தனையோ கலைஞர்கள் முன்னுக்கு வந்திருக்கிறார்கள் எனவே, நான் டைரக்ட் பண்ணுவதை அவர் வரவேற்றார். அந்த அன்புள்ளம் கொண்டவருக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

கே:- இலங்கையில் உங்களுக்கு விருப்பமான டைரக்டர் யார்?

ப:- லெனின் மொராயஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே:- ஏன் லெஸ்டர் ஜேமிஸ் பிரிஸ் . . . .?

ப:- அவர் ஒரு சிறந்த டைரக்டர் என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவர் சத்தியஜித்ராய் போல் கலாச்சார படங்களை எடுப்பவர், ஆனால், லெனின் மொராயஸ் ஜனரஞ்சகமான படம் எடுப்பவர் என்பதனாலே பின்னவரை விரும்ப வேண்டி இருக்கிறது.

---

# காலியில் ''மாத்தறை ஆச்சி''

அடிபிடியில் படக்காட்சி

சிங்கள சினிமா சீராகத் தலை தூக்கி வரும் இந்நாட்களில் நாட்டுக்குள் இருக்கும் நற்காட்சிகளைக் கவனிக்காது விட்டிருப்பது ஒரு பெரும் குறை என்பதை நாம் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பதல்ல. இருந்தும், நம்நாட்டின் இயற்கை வனப்பை வைத்தே படம் பிடித்து விடலாம் என்ற தைரியம் வைத்த ஒரு இளைஞர் ''மாத்தறை ஆச்சி'' என்று பெயரிட்ட படம் ஒன்றிற்காக சென்ற வாரம் ஒரு சண்டைக் காட்சியை காலி நம்பாட்டில் படமாக்கினார். இதில் கலந்து கொண்ட நடிகர்களின் நடிப்பை இயற்கையே அபாரமாக்கியதைக் கண்ட பொழுது தமிழ் நாட்டில் பல லட்ச ரூபாய்களைக் கரியாக்கி அமைக்க வேண்டிய செட்டுக்களை நம் நாடு தானமாகத் தருகிறதே என்று தான் நான் பெருமிதம் கொண்டேன். படத்திற்கேற்ற நடிப்பும், நடிப்பிற்கேற்ற துடிப்பும் நம்மவர்களிடம் இருக்கும் போது. காட்சிக்கான மாட்சியைக் கொடுக்கும் நம் நாட்டின் வனப்பும் ஒத்துழைக்கிறதே என்பதை 'மாத்தறை ஆச்சி' யின் படப் பிடிப்பின் போது காணக் கிடைத்தது. பணத்தை வீணில் விரயமாக்காது மனத்தின் திடத்தை நம்பி படப் பிடிப்பைத் தொடர்ந்து காலியில் நடத்தி வெற்றி கண்ட சதிஸ்சந்தர எதிரிசிங்ஹ‌ரை மற்றும் பட உத்பத்தியாளர்கள் பின் பற்றினால், அவர்கள் பணமும் மிஞ்சும், படமும் தேறும் என்பதில் ஐயமுற வேண்டியதில்லை.

# ''ரோஜா'' வின் வரவேற்பு

நாடி வந்தவரை வாடிவிட விரும்பாத 'ரோஜா', காலிக்கு விஜயம் செய்த நடிகர்களை எமது வாசகர்களின் சார்பில், அரவணைத்து, அன்பு ததும்பப்பேசி, இன்முகம் காட்டி, பட்சணம் பல பரிமாறிப்பாங்காக வர வேற்று வழி அனுப்பியதை பல மக்கள் கண்ணாரக் கண்டு, வாயாரப்போற்றி புகழ்ந்தனர், என்றாலும் புகழ்ச்சியை விரும்பாது மலர்ச்சியில் நாட்டம் கொண்ட உணர்ச்சி வசப்பட்ட உங்கள் 'ரோஜா' விற்கு உவகை ஊட்டவா தேவை? மலர் அதைக் கொய்யும் மக்கள் பலர் இருக்க, மணம் அதன் சிறப்பின் குணம் ஆகிவிடாதன்றோ!!

# ஆசிர்வாதம்

இதை உணர்ந்த திரு. எலெக்ஸன்டர் பெர்ணண்டோ 'ரோஜா' வின் உணர்ச்சியும், உற்சாகத்தையும், உளமாரப் போற்றி

''வாழிய பெரிதே! வாழிய பெரிதே!
ஆழி சூழ் உலகில் அமை நலம் பெற்றே!
'ரோஜா' மலரே! வாடா மலராய், நீ
வாழிய பெரிதே! வாழிய பெரிதே''

என்று வாயாரப் போற்றி, ஆசீர்வதித்து, ஆனந்தம் கொண்டார், என்பதும் குறிப்பிடத்தக்கது.



M. S. M. ஹரீஸ்
அதிபர்
கா/மல்ஹருஸ் ஸுல்ஹியா
ம. வி.

# பெருமானாரின் பெரும் பண்புகள்

திருமறை இஸ்லாத்தின் தலைவர் பெருமானார் நபி (ஸல்) அவர்கள் சர்வ பண்புகளும் நிறைந்த ஒரு பூரண மனிதர். அவரிடம் நிறைந்து காணப்பட்ட உத்தமப் புருஷார்த் தங்கள் உலகில் வேறெந்த மனிதரிடமும் அவ்வளவு பரிபக்குவமடைந்த நிலையில் காணப்படவில்லை. அவற்றை நாம் நன்கு பரிசீலனை செய்யுமிடத்து, அன்னார்க்கு என்றுமே ஒப்பாரோ மிக்காரோ இதுவரை தோன்றவோ இனிமேல் தோன்றக் கூடிய நிலையோ காணப்படவில்லை, அவற்றுள் ஒரு சில பண்புகளை யேனும் இக்கட்டுரையின் கண் ஆராயலாம்.

**பெருமானாரின் ஒழுக்கசீலம்:** அன்னாரைக் கண்டித்த ஒரு மனிதரை ஒரு முறை அன்னை ஆயிஷா தூஷிக்கவே அன்னார் ஆயிஷாவை நோக்கி ''நான் மக்களின் சௌகரியத்திற்காக அனுப்பப்பட்டேனே ஒழிய அவர்கட்குக் கஷ்டத்திற்காக அனுப்பப்படவில்லை'' என்றனர். இன்னொருமுறை ஒருவன் பெருமானாரின் மஞ்சத்தில் மலம் கழித்து விட்டான். அவர்கள் தம் திருக்கரத்தினாலேயே அதைச் சுத்தப் படுத்தினர். அதையிட்டு அவனை நொந்து கொள்ள வில்லை. எவரிடமும் அவர்கள் பழி வாங்கியதேயில்லை.

**பெருமானாரின் அன்பு:** அன்னார் மற்றவர்களுக்கு அன்பு காட்டுவதில் பாரபட்சம் காட்டவில்லை. பாத்துமத்துஸ் ஸஹ்றாவைத் தனது ஈரல் குலை யென வர்ணித்த அதே வாயால் அஜமியாகிய ஸல்மானுல் பாரிஸை தனது தசைக்கட்டி யென வர்ணித்து ஆலிங்கனம் செய்தனர். மனிதன் மீது அன்பு காட்டாதவன் அல்லாஹ்வின் அன்பிற்கு ஆளாக மாட்டான் என அடிக்கடிக் கூறினர். ஆறறிவு படைத்த மக்களிடம் மாத்திரமன்றி ஐயறிவின் மிருகங்கள் மீதும் அவர்கள் தமது அன்பைக் காட்டத் தவறியதே கிடையாது, ஒரு முறை களைத்துக் காணப்பட்ட ஒரு ஒட்டகத்தைக் கண்ணுற்ற போது மிருகங்களைச் சௌக்கியமான நிலையில் அன்றி ஏற உபயோக்காதீர்கள். சௌக்கியமான முறையிலன்றி வளர்க்காதீர்கள் என்றார்கள்.

**பெருமானாரின் தாழ்மை:** எந்தத் தொழிலும் மகத்துவ முடையதாகவே அவர்கள் கண்டனர். வீட்டு வேலைகளைத்தாமாகவே செய்வதிலும், மற்றவர்களுக்கு வேலை செய்து கொடுத்து உதவி செய்வதிலும் பெருமை கொண்டனர். ஆட்டில் பால் கறக்க, தமது உடைக்கு அண்டைபோட, வீட்டைப் பெருக்க, செருப்பைத் தைக்க, உணவைச் சமைக்க அன்னார் எப்பொழுதும் வெட்கிக்க வில்லை.

**பெருமானாரின் ஆடம்பரமற்ற வாழ்க்கை.** உடையில், நடையில், பாவனையில் தம்மை விசேடமாய்க் காட்டிக் கொள்ள அன்னார் விரும்பவில்லை. ஆடம்பரமான வீட்டு ஜோடிகளைப் பெருமானார் வெறுத்தனர். அரேபிய நாடு முழுவதும் தமது கையின் கீழ் வந்த காலத்தும் மகளார் பாத்திமாவிற்கு ஒரு பணிப்பெண் வைத்து வேலை வாங்க அன்னார் அனுமதிக்கவில்லை. ஆடம்பரமான வீடொன்றை அழகாகக் கட்டி எழுப்பிய அன்சாரியுடைய சலாத்திற்கும் பெருமானார் பதில் கூறவில்லை.

**பெருமானாரின் விருந்தோம்பல்:** விருந்தோம்பலில் பெருமானார் பெரும் விருப்புடையவராய்க் காணப்பட்டனர். அறபி, அஜமி. முஸ்லிம், காபிர் என்ற தார தம்மிய மின்றி தங்களால் இயன்ற அளவுக்கு விருந்தோம்பினர் ''தருமங்களில் உயர்ந்தது பசித்த வயிற்றுக்கு உணவளிப்பது'' என்று அவர்கள் அடிக்கடி கூறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானாரின் உண்மை: பொய்ச் சொல், புனிதத்துறை பெருமானாரின் வாயிலிருந்து வந்ததேயில்லை. 'அல் அமீன்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற நபியவர்கள் இந்த உயர் பண்புக்காக தங்கள் சத்துருக்களாகிய அபூசுப்யான் போன்றவர்களாலும் போற்றப் பட்டனர்.

பெருமானார் முகஸ்துதியை வெறுத்தமை: ஒருவரை யொருவர் முகத்துதி செய்வதைப் பெருமானார் வெறுத்தனர் அவர்களை அவர்களது முகதாளித புகழ்வதைக் கூட பெருமானார் விரும்பவில்லை. ஒரு முறை பெருமானார் உடைய முகதாலில் ஒருவர் இன்னொருவரைப் புகழ, "நீ உனது நண்பனின் கழுத்தை வெட்டி விட்டாய்" எனக் கூறினர். இன்னொரு முறை அஸ்வட்பின்ஸரீ என்ற புலவர் இறைவனைப் புகழ அனுமதி கேட்கப் பெருமானார் உடனடியாக அனுமதி வழங்கினர். இடையில் அக்கவிஞர் பெருமானாரைப் புகழ எத்தனித்ததும் உடனடியாக பெருமானார் அதை நிறுத்திவிட்டனர்.

பெருமானாரின் மன்னிக்கும் சுபாபம்: எல்லா வற்றிற்கும் மேலாக நபிய வர்கள் தம்மை எல்லாவற்றின் ஒறுத்தவர்களையும் அடித்தவர்களையும் கூட மன்னித்ததவை ஒரு பெரும் உலக சாதனையாகும். ஹம்சா (ரலி) வைக் கொன்ற வஹ்சியையும் அதற்கு உடந்தையாய் இருந்த ஹிந்தையும், அபூசுப்யானையும், அபூஜஹ்லின் மகரு இக்ரிமாவையும் தாயிவில் வைத்து தம்மைப் பெரும் துன்பத்திற்கு ஆளாக்கிய அத்தனை பேரையும் பெருமானார் மன்னித்தனர். அவர்கள் செய்த அநியாய அபகாரங்களை மறந்தனர்.

இத்தகைத் தனிப் பெரும் பண்புகளைக் கொண்ட மாபெரும் மேதை, மானிலத்தின் மணிவிளக்காம் மாநபியன்றோ? அன்னார் மீது இறைவனும் அவனது மலக்குகளும் சலவாத்துக் கூறுகின்றனர். நாமும் அன்னார் மீது சலவாத்துக் கூறுவோமாக.

## ஒரு நிமிடம்

'ரோஜா' வுக்கு ஏராளமான சிறு கதைகள், கட்டுரைகள், மற்றும் விடயங்கள் வாசகர்களிட மிருந்து கிடைத்துள்ளன. விடயங்களை அனுப்பிய பலரும் தங்கள் கடிதங்களுக்கு பதில் எழுதும்படி குறிப்பிட்டிருக்கின்றனர். தனிபட்ட முறையில் எல்லோருக்கும் பதில் எழுத முடியாமைக்கு நாம் வருந்துவதோடு தகுதியான விடயங்களை விரைவில் "ரோஜா" வில் பிரசுரிக்க முயற்சி எடுத்துள்ளோம் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆ – ர்

## நன்றி

'ரோஜா' மணம் குறையாமல் மலர்ந்து மணம் பரப்புவதற்காக நல்ல பல ஆலோசனைகளை கூறியவர்களுக்கும், ஊக்கத்தைக் கொடுத்தவர்களுக்கும், 'ரோஜா' செழித்து வளர்வதற்கு இன்ன இன்ன பசளைகளைப் போடுங்கள் என்று அறிவுரை கொடுத்தவர்களுக்கும் எங்கள் இதய பூர்வமான நன்றி.

ஆ – ர்



தொடர் கதை
ஸித்தி செய்னு தெஹிவலை.

# இப்படியும்-நடக்கலாம்

சிம்மக்குரல், சிந்திக்க வைக்கும் சொல்வளம், அடுக்கு மொழி, அனுயாசமான உவமைகள், அவனது பேச்சில் உருண்டு வந்தன. இடை இடையே அவன் சொன்ன குட்டிக் கதைகள், கூடி இருந்த மக்களைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்தன. மேடையில் ஏறி, கம்பீரமாக வந்து, ஒலிவாங்கியின் முன் நின்று, "தலைமைக்குத் தகுதியுள்ள தலைவர் அவர்களே" என ஆரம்ப அடியை அடுக்குத் தொடரிலே எடுத்து வைத்து "விடைபெறுகிறேன், வணக்கம்!" என முடித்த வரையில் உள்ள 3 மணி நேரமும், அவன் சொற்களைத் தேடி அலைய வில்லை, சொற்கள் தான் அவனைத் தேடி ஓடி வந்தன.

எச்சில் துப்பும் இடத்தில் பலகை கிடந்தால், அதுதான் மேடை என்று எண்ணி, பேச்சு என்ற பெயரில் ஏச்சுத் தர்பார் நடத்தும் போலிகள் மத்தியில், அவனது பேச்சு ஒரு புதுமையாகவே இருந்தது.

சொல்லைச் சுவை படுத்தி - அதை
வெல்லும் கருத்தாக்கி - மக்கள் நெஞ்சில்
கல்மேல் எழுத்துப் போல் பதியவைத்து
வில்லேருழ வரும் கேட்டு வியக்கும்
அந்தச் சொல்லேருழவனைப் பற்றி.

என் சிந்தனை சிறகடித்தது. பொய்யுரைப்பவன் அல்ல அவன், மெய்யுரைக்கும் மேலனவன் என்ற எண்ணம் என் இதயத்தை எட்டிப் பிடித்த நேரம், "அவன் யார்"? என்ற வினாவும் வெடித்துக் கிளம்பத்தான் செய்தது.

இலட்சக் கணக்கான மக்கள் அவன் பேச்சைக் கேட்கக் காத்து நின்றார்கள். அவன் பேச்சின் சக்தியே தனி! சாதாரண மேடைப் பேச்சாளர்களின் பாணியை விட, இவனது நடை தனி நடையாக இருந்தது.

சிங்க நடையா? சிங்காரத் தென்றல் நடையா? பொங்கு தமிழ் நடையா? அல்லது புரட்சிப் புது நடையா? இதில் எந்த நடை, அவன் பேச்சு நடை? விடைகாண முடியாத கேள்வி இது? ஆனால் "அவன் யார்? எங்கிருந்து வந்தான்? என்ன அவன் பூர்வாங்கம்?" இந்த கேள்விகள் மாத்திரம் என் இதயத்தைத் துளைத்துக் கொண்டே இருந்தது!

அவன் என்ன சினிமா நடிகனா? திரையுலகத் திலகமா? இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறை நூறாக்குவோம் என ஓட்டு வேட்டையாடி, வெற்றி பெற்ற பின்பு, அந்த ஆறையே கூளாக்கி, வேறாக்கி, நீடுக்கி, தூளாக்கி விடும் தூய்மை கெட்ட அரசியல் வாதியா? அப்படியும் இல்லை! வாரிவளங்கும் வள்ளலா? இல்லை என்று தான் பதில் வருகிறது.

பளபளக்கும் கார்ப் பட்டு விரித்த தரையும், குளு குளு அறையும் கொண்டவனா? இல்லை! இல்லை! இல்லை! ஆனால் அவனை எங்கோ நான் பார்த்திருக்கிறேன். கொஞ்சங் கொஞ்சமாக இப்பொழுதுதான் அவன் முகம் என் நினைவுக்கு வருகிறது

அப்பொழுது நான் ஒரு வக்கீல், சுமார் 5 ஆண்டுகட்கு முன், எனது வலது பக்கத்தில் அமைக்கப் பட்டிருக்கும் குற்றவாளிக் கூண்டில் அவன் நின்று கொண்டிருகிறான். அவனது முகம் களங்க மற்றுக் காட்சி அளிக்கிறது. அவன் பெயர் சங்கிலி மீராசா! அவனிடம் நீதிபதி கேள்வி கேட்கிறார். அவன் பதில் சொல்கிறான். திரு. நாகலிங்கத்தின் வீட்டிற்குச் சென்று அவரைப் பயமுறுத்திப் பணம் பறித்த தாகக் குற்றம் சாட்டப் பட்டிருக்கிறாய், நீ ''குற்றவாளியா? சுற்றவாளியா? '' வழமை போல் எல்லா குற்றவாளி களிடமும், எல்லா நீதிபதிகளும் கேட்கும் கேள்வியைத் தான் அவரும் கேட்டார்

''நான் குற்றவாளி அல்ல'' என்று புன்னகைத்த படியே பதில் தந்தான் அவன்!

''உனக்காக வாதாட யாரை நியமித்திருக்கிறாய்?'' அடுத்த கேள்வியைத் தொடுத்தார் நீதிபதி

''வக்கீல் வைத்து வாதாடும் அளவுக்கு நான் வக்குள்ளவன் அல்ல! நீதிபதி அவர்களே! என் வழக்கை நானாக எடுத்துரைக்க அனுமதி வழங்க வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்'' என்றான் அவன். அனுமதி அளித்தார் நீதிபதி. பேச்சைத் தொடங்கினான் அவன்! நான் அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

நீதிபதி அவர்களே! ஒரு காலத்தில் நானும் ஒரு குற்றவாளி தான். வளர்த்த முறையில் தவறோ? அல்லது வளர்க்கப்பட்ட முறையில் தவறோ எனக்குத் தெரியாது! சின்ன வயதிலேயே பெற்றவனை இழந்தவன் நான், என்னைப் பாதுகாக்கத் தந்தையும் இல்லை! எதை எதையோ செய்து எப்படியோ வளர்ந்தேன். சின்ன வயதில் செய்த சிறிய திருட்டுகள் காலப் போக்கில் வளர்ந்தன. என் உடல் வளர்ச்சி போலவே நான் செய்த குற்றங்களும் வளர்ந்தன.

நாட்டுக்குத் தேவையான நல்ல பணிகளைச் செய்ய வேண்டிய இளமைப் பருவம், மக்களை வாட்டத் தலைப் பட்டது. உள்ளமும் உடலும் உறுதி பெற்றிருந்த வேளையில் தான் இதோ நிற்கிறாரே திருவாளர் நாகலிங்கம், அவரது நட்பு எனக்குக் கிடைத்தது. தெருச் சண்டியனாக இருந்த என்னை நாகரீகச் சண்டியனாக மாற்றிய பெருமை அவருக்குண்டு.



இந்த நாட்டு மக்களின் வெளி நாட்டு மோகத்தை தரம் போட்டு வைத்திருந்த நாகலிங்கம், கள்ளக் கடத்தலுக்கு உரம் போட்டு வளர்த்தார். அதற்கு என் துணிவு துணை நின்றது. அரசாங்கம் தடை விதித்த பொருட்களை அனாயாசமாகக் கடத்தினோம். இறக்கு மதி இல்லாத பொருட்களை எல்லாம், இலகுவாகக் கடத்தினோம்.

எந்த ஒரு பொருளுக்கு கட்டுப்பாடும், தடையும் விதிக்கப் படுகிறதோ, அந்தப் பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்படுவது இலங்கையைப் பொறுத்த வரையில் சாதாரண விஷயம், அதிலும் வெளிநாட்டுப் பொருள் என்றால் விழுந்தடித்து வாங்குவதில் நமது மக்கள் கைதேர்ந்தவர்கள்.

நாடு, காடு, என்று மேடைகளில் பேசுவோர் கூட, வெளி நாட்டுக்கு ஓடு ஓடு என்று ஓடுகிறார்களே ஏன் என்று உற்று நோக்கினால், அவர்கட்கு நாட்டை விட புற நாட்டுப் பொருட்களிடம் தான் மோகம் அதிகம்! இப்படிப் போகிறவர்கட்கு நாட்டுப் பற்று இருக்கிறதோ இல்லையோ அவர்களது மனைவியர்க்கு வெளிநாட்டு மோகம் அதிகம். இந்த நாட்டு மக்களின் அந்தப் பலஹீனத்தைப் பயன் படுத்திய வர்களில் முதல்தரமானவர்கள் நாங்கள்தான்.

வழவழப்பான எங்களது கடத்தல் பாதையில் ஒரு குழியாக, கிடு கிடு என்ற எங்கள் கடத்தல் ஓட்டத்திற்கு ஒரு தடையாக, வெளிச்சமான எங்கள் வாழ்க்கையில் ஒரு இருளாக இன்ஸ்பெக்டர் முத்து ராஜா குறுக்கிட்டார்.

லட்சக்கணக்கில் பேரம் பேசினேன், இன்ஸ்பெக்டர் தன் லட்சியத்தை விட்டுக் கொடுக்க மறுத்து விட்டார். இத்தனை நேரம் பன்மையில் சென்றோம் வென்றோம் என்று பேசி விட்டு, பேரம் பேசினேன், என்று ஒருமையில் சொல்வது உங்களுக்கு ஆச்சரிய மாக இருக்கலாம்.

இதில் ஆச்சரியப் படுவதற்கு எதுவும் இல்லை! இது போன்ற சந்தர்ப்பங்களில் நாகலிங்கம் தப்பித்துக் கொள்வார். அல்லது என்றால் தப்ப வைக்கப் படுவார். அதுபோன்று தான் இன்ஸ்பெக்டர் முத்து ராஜாவின் விஷயத்திலும் நாகலிங்கத்தின் நிலை.

கடமையே பெரிதென நினைத்த இன்ஸ்பெக்டர் முத்து ராஜா என்னைக் கைது செய்ய முனைந்தார். என் பழைய முரட்டுத்தனம் வெடித்து எழுந்தது! என் கையில் துப்பாக்கி வருவதற்கு முன்பே இன்ஸ்பெக்டரின் துப்பாக்கி என் தொடையைத் துளைத்தது. கைது செய்யப்பட்டேன்! கொலை செய்ய முயன்ற குற்றத்திற்காக 10 ஆண்டுகள் சிறைசென்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறை மனிதனைச் சிதைத்துச் சின்னாபின்னமை படுத்தி விடும் என்பார்கள். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் சிறை என்னைச் சிதைக்க வில்லை! சிந்தனையாளனாக மாற்றியது. சிறைச்சாலை நூலகத்தில் கற்ற நூல்கள், என்னை மனிதனாக்கி, புதிய மனிதனாக, புதுமையை விரும்பும் மனிதனாக, உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட நாணயஸ்தனாக வாழ விரும்பினேன்

விடுதலை பெற்றேன்! எங்கேயும் வேலை தேடிச் செல்ல வில்லை அதற்குக் காரணமும் இருந்தது. சிறை சென்று திரும்பியவர்கள் மீண்டும் சிறை செல்லவே விரும்புகிறார்கள் என்றால் அதற்கு போலீசார் ஒரு காரணம்.

எங்காவது ஒரு வேலையைப் பிடித்துக் கொண்டு நிம்மதியாக வாழலாம் என்றால் அங்கும் போலீசார் வந்து விடுகிறார்கள். சிறை சென்றவன் என்று உரிமையாளர்களிடம் கூறிவிட்டுப் போய் விடுகிறார்கள். அடுத்த நாளே வேலை இல்லை!

சிறை சென்று திரும்பிய குற்றவாளிகளை, அதாவது I. R. C என்ற நிலையில் உள்ளவர்களை, கண்காணிக்கும் உரிமை பொலீசாருக்கு உண்டு. ஆனால் தூரத்தில் இருந்துதான் I. R. C. களின் நடமாட்டத்தைக் கவனிக்க வேண்டும் என்ற கட்டுப்பாடும் உண்டு. அந்தக் கட்டுப்பாடு தளர்த்தப் படும் போது, சிலர் சிறைப் பறவைகளாகவே வாழ வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இவற்றை எல்லாம் சிறையில் இருக்கும் போதே கைதிகளின் மூலம் தெரிந்து வைத்திருந்த நான் விடுதலையாகி வெளியே வந்ததும் வேலை தேட முயற்சிக்க வில்லை

நேராக நாகலிங்கத்தின் வீட்டிற்குத் தான் போனேன். அங்கே நாகலிங்கம் ஏதோ ஒரு பேப்பரைப் படித்துக் கொண்டிருந்தார். படித்துக் கொண்டிருந்தார் என்று சொல்ல முடியாது, பதட்டத்துடன் இருந்தார் என்றே சொல்ல வேண்டும். என் காலடி இசைகேட்டு நிமிர்ந்து பார்த்தார், வா! வா! என்று வற வேற்றார்.

( தொடரும் )


ஆதரவாளர்களுக்கும் அன்பர்களுக்கும்

**எங்கள் வாழ்த்து**

**காலியில் சைவ உணவிற்குச் சிறந்த இடம்**

**நேரு கபே**

37, தங்கெதர வீதி — காலி.




# மாணவ மாணவிகளுக்கு

# முக்கிய அறிவிப்பு

பாடசாலை மாணவ மாணவிகளுக்கு எமது ''ரோஜா'' பத்திரிகையில் ''மாணவர் உலகம்'' எனத்தலைப்பிட்டு ஒரு புதிய பகுதியை ஆரம்பிக்க தீர்மானித்துள்ளேன். இப்பகுதியில் மாணவ மாணவிகளின் கதை, கட்டுரைகள் தொடர்ந்து மாதா மாதம் இடம் பெறும். மாணவ மாணவிகள் கீழ்வரும் நிபந்தனைகளுக்கு அமைய விடயங்களை அனுப்ப வேண்டும்.

1. சிறு கதைகள்- புள்ஸ்கேப் தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

2. கட்டுரைகள்- புள்ஸ்கேப் தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

3. விடயங்கள் அனுப்புவோர் புள்ஸ்கேப் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவும்.

4. தாங்கள் அனுப்பும் கதை கட்டுரையின் கீழ் பாடசாலையின் பெயரையும், உங்கள் பெயர் விலாசத்தையும் தெளிவாக எழுதவும்.

5. விடயங்களை கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

   C/o '' ரோஜா '' 199/1, Dangedara Road, Galle.

6. சிறந்த கதை கட்டுரைகளை இப்பகுதியில் பிரசுரிக்க சந்தர்ப்பம் அளிப்பதோடு அவற்றிற்கு சன்மானமும் அளிக்கப்படும்.

நாட்டுக்கும், மக்களுக்கும், கலைக்கும், கலாசாரத்திற்கும் நற்பணிகள் செய்ய முன்வந்திருக்கும் 'ரோஜா' இதழை வாங்கி எமக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு மிகத்தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன்.

குறிப்பு:— 'ரோஜா' இதழை வாங்க விரும்பும் மாணவர்கள் பாடசாலை அதிபரிடம் அல்லது கீழ்க்காணும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
199/1, Dangedara Road, Galle.

இப்படிக்கு,
உங்கள் ஒத்துழைப்பை எதிர்பார்க்கும்

ஆசிரியர்

பிரதியின் விலை **40** சதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை.

ஏ. அருணன் பி. ஏ.
கொழும்பு.

# நாடும் நாடகமும்

நாடகத்துறையில் ஈடுபட்டுப் பணியாற்றி வந்தவர்களை சமுதாயம் தாழ்வாகக் கருதிவந்த எண்ணம் மறைந்து, சமுதாய நல்வாழ்விற்கு நாடகத்துறைக் கலைஞர்களின் பணி எவ்வளவு இன்றியமையாதது என்பதை மக்கள் உணர்ந்த காலமாக வளர்ந்துவருகிறது.

மக்களின் உள்ளத்தில் கருக்கொண்டு எழும் கருத்துக்களைப் பொதுவாக இரு பெரும் வகையினவாகப் பிரிக்கிறார்கள் உலகச் சான்றோர். ஒரு வகையை அறிவியற் கருத்துக்கள் என்றும், மற்றொரு வகையைக் கலையியற் கருத்துக்கள் என்றும் கூறுகிறார்கள்.

எது ஒன்றை அறிவியல் என்றும், எது ஒன்றைக் கலையியல் என்றும் கூறுகிறார்கள் என்று பார்த்தால், எந்த ஒன்று அறிவால் அளந்தறியப் படுகிறதோ அதை அறிவியல் என்றும், எந்த ஒன்று உணர்வால் அளந்தறியப் படுகிறதோ, அதைக் கலையியல் என்றும் உணர்த்துகிறார்கள்

எடுத்துக்காட்டாக, உலகம், ஞாயிறு ஆகியவற்றின் இருப்பைப்பற்றி அறிவியலைக் கேட்டால், அது, ஞாயிறானது உலகிலிருந்து ஒன்பது கோடியே இருபது லட்சம் மைல் தொலைவில் இருக்கிறது என்றும், ஞாயிறு தன்னைத்தானே சுழற்றிக் கொள்ளுகிறது என்றும் ஞாயிறு இருந்த இடத்திலேயே இருக்கிறது என்றும், உலகம் தான் ஞாயிற்றைச் சுற்றி வருகிறது என்றும் அதுவும் முந்நூற்றறுபத்தைந்தே கால் நாட்களில் சுற்றிச் சுழன்று வருகிறது என்றும், பகலும், இரவும் உலகின் மீது ஓயாமல் ஒழியாமல் பட்டுக் கொண்டே இருக்கின்றன என்றும், உலகம் முழுவதையும் ஒன்றாக வைத்துக் கணக்கிடும் போது அதற்குக் காலை, மாலை, இரவு என்று வரையறுத்துச் சொல்லத்தக்க பொழுதுகள் இல்லை என்றும் சொல்லும். ஆனால், உலகம், ஞாயிறு ஆகியவற்றின் இருப்பைப்பற்றிக் கலையியலைக் கேட்டால், அது செங்கதிரோன் செவ்விய விரிகதிர்களைப் பரப்பிக் கொண்டு, நீலத்திரைக் கடலைக் கிழித்துக் கொண்டு மேலெழுந்து மலர்க்குவியல்களைப் பார்த்துச் சிரித்து நிற்கிறான், என்றும் சொல்லும்.

அறிவியல், இருக்கும் உண்மையை அறிந்தவாறு அப்படியே சொல்லும், கலையியல் உள்ளத்திற்குப் படுவதை உணர்ந்தவாறு சொல்லும். கலையியலும் அறிவியலும் ஒன்றிற்கொன்று தேவையான அளவு வேறுபடவே செய்யும். ஆனால், வேறுபடும் இரண்டும் உண்மையாகவே உள்ளத்திற்குத் தோன்றும். அறிவுக் கண்ணால் பார்க்கும் போது அறிவியல் உண்மையாகப்படும், உணர்வுக் கண்ணால் பார்க்கும் போது கலையியல் உண்மையாகப்படும். அறிவியலிலிருந்து வேறுபடும் கலையியல் உண்மையைப் பாதுகாக்கும் அளவுக்குத்தான் வேறுபடலாமே

விடயதானங்களுடன் புகைப்படத்தையும் பிரசுரிக்க விரும்பும் வாசகர்கள் தங்கள் புகைப்படத்துடன் ரூ. 10 கு மணி ஓடர் அனுப்பும்படி வேண்டப்படுகின்றனர்! ஆ - ர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழிய, உண்மையாக இருக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறுகிற அளவுக்கு முரண்படக் கூடாது. கலையியல் உவமை, உருவகம் போன்ற தன் அணிகள் என்னும் கருவிகளின் துணை கொண்டு உணர்வை வெளிப்படுத்தி உண்மை போல காட்டலாம். ஆனால், அந்தக் கலையியல் அறிவியலுக்கும், உணர்வினால் பெறப்படும் உண்மைக்கும் முரணாகும் வகையில் கருத்துக்களைக் கூறி, அவற்றை நம்பும் படி வற்புறுத்திக் கூற முற்படக் கூடாது. அப்படி முற்படும் போது தான் கலையியலினால் பெறப்படும் முழுப்பயனையும் மக்கட் சமூகம் பெற இயலாது போகிறது.

அறிவைத் துணைக்கு அழைத்துக் கொண்டும், அழைத்துக் கொள்ளாமலும் உணர்வின் மூலம் உள்ளத்திற்கு இன்பம் ஊட்டுவன கலைகளாகும். கலைகள், இலக்கியற்கலை, இசைக்கலை, நடிப்புக்கலை ஆடற்கலை, ஓவியற்கலை, சிற்பக்கலை, உடற்பயிற்சிக்கலை என்று பல் வேறு வகைப்படுகின்றன. கலைகள் எல்லாவற்றிலும் மிகச் சீரிய கலையாக உலகோர் போற்றுவது இலக்கியக் கலையாகும். அது வற்று இன்பத்தைச் சிந்தைக்கு மட்டுமே கொடுத்துக் கொண்டே இருக்கும் வெறும் இசைக்கலை செவிக்கு மட்டுமே இன்பம் தரும். இலக்கியக் கலையையும் இசைக்கலையையும் ஒன்றாகச் சேர்த்துப் பாட்டாகப் பாடினால் அது சிந்தை செவி ஆகிய இரண்டிற்கும் இன்பம் அளிக்கும் தன்மையைப் பெறுகிறது. வெறும் நடிப்புக்கலை கண்ணுக்கு மட்டுமே இன்பம்அளிக்கும். அத்தோடு இலக்கியக்கலையையும்இசைக்கலையையும் சேர்த்து அதனை நாடகக் கலையாக மாற்றினால்,அது,மனிதனின் சிந்தை, செவி, கண், மூன்றிற்கும் இன்பம் தரும். உள்ளத்தின் நயம் இலக்கியத்திலும், உணர்வின் நயம் இசையிலும், உடலின் நயம் நடிப்பிலும் தென்படும். இம்மூன்று நயங்களையும் குழைத்து ஊட்டி, சிந்தைக்கும் செவிக்கும், கண்ணுக்கும் இன்பந் தரும் ஒரு பெருங்கருவி நாடகமாகும்.

பொதுவாக இலக்கியத்தை அணுகும் மக்கள் குறைவாகத் தான் இருப்பார்கள். அந்த இலக்கியத்தை இசையோடு குழைத்துத் தந்தால் அதை அணுகும் மக்கள் சற்று மிகப் படுவர்; இசையோடு கலந்து அந்த இலக்கியத்தை நடிப்போடு குழைத்துத் தந்தால் அதை அணுகும் மக்கள் இன்னமும் மிகப் படுவர். அதற்குக்காரணம் என்னை எனில், சிந்தையால் ஈர்க்கப்படுபவர் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகத்தான் இருக்கும்; சிந்தையில்லாவிட்டாலும் செவியால் ஈர்க்கப் படுபவரின் எண்ணிக்கை அதைவிட மிகவாகவே இருக்கும். சிந்தை செவி ஆகிய இரண்டிலும் ஈர்க்கப்படாவிட்டாலும், கண்ணால் ஈர்க்கப் படுபவரின் எண்ணிக்கை அதைவிட மிகவாகவே இருக்கும்.

இவ்வாறாக எல்லாவகையிலும் பயன் விளைவிக்கத்தக்க நாடகக்கலையைப் போற்றி வளர்த்து வருவது மட்டுமல்லாமல் அறிவும், அறமும் மக்கள் சமுதாயத்தில் ஓங்கி வளர அக்கலை பயன் பட வேண்டும் என்ற எனது எண்ணத்தை நம் தாயகத்தின் இளைஞர் முன் பணிவுடன் படைக்கின்றேன்.

# அறிவுக்கு விருந்து - 1

.போட்டி முடிவு

இப்போட்டியில் நாட்டின் நாலா பக்கங்களிலும் இருந்து நூற்றுக்கணக்கான வாசகர்கள் கலந்துக் கொண்டார்கள். அவர்களிடம் இருந்து எமக்கு பல விதமான விடைகள் கிடைத்தன. எமது வாசகர்களின் முயற்சியை பாராட்டுகிறோம். ஆனால் "ரோஜா" வாசகர்களில் ஒருவரின் நெஞ்சிலாவது சரியான விடை உதிக்கவில்லையே என்பதை மிக கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் ஒரு முறை இப்போட்டியில் பங்கு பற்ற சந்தர்ப்பம் அளிக்கவில்லையே என்ற ஏக்கம் எமது வாசகர்களின் மனதை உறுத்திக் கொண்டிருக்கலாம். மீண்டும் இப்போட்டியை ஆரம்பித்தால் ஏற்கனவே பிரசுரித்த "தென்றல்" நாடகத்தை இந்த இழலில் பிரசுரிக்க வேண்டிய நிலை ஏற்படும். வாசகர்களின் அறிவுக்கு விருந்தளிக்க மூன்று பரிசு போட்டிகள் இந்த இதழில் இடம் பெறுகின்றன.

சரியான விடை:—

ரவி லதாவின் கழுத்தில் தங்கச் சங்கிலியைக் கட்டும் போது சுந்தர் படம் பிடிக்கிறான். அந்த படம் அடங்கிய படச் சுருள் (Film Reel)

# போட்டி நிபந்தனைகள்

1. ஒருவர் ஒரு போட்டிக்கு எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் போட்டிகளுக்காக பிரசுரிக்கப்பட்டுள்ள பிரவேசப்பத்திரங்களுடன் வரும் விடைகள் மட்டுமே போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்படும்.
2. போட்டிக் குழுவினர்கள் எடுக்கும் முடிவே இறுதியானதாக இருக்கும். போட்டிகள் சம்பந்தமாக எவ்வித கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. போட்டி முடிவுகள் அடுத்த இதழில் வெளியிடப்படும்.
4. போட்டிகளுக்கான தங்கள் விடைகளை தெளிவாக ஒரு கடதாசியில் எழுதி அதன் கீழ் தங்கள் பெயர், விலாசத்தை ஆங்கிலத்தில் குறிப்பிடல் வேண்டும்.
5. விடைகளை கீழ்க்காணும் விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**C/o ROJA, 199/1, Dangedara Road, Galle.**

1 சிறு கதைகள்:— புள்ஸ்கேப் தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

2. கட்டுரைகள் :— புள்ஸ்கேப் தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

3. விடயங்கள் அனுப்புவோர் புள்ஸ்கேப் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவும்.

4. நீங்கள் எழுதி அனுப்பும் கதை கட்டுரைக்கு கீழ் உங்கள் பெயர் விலாசத்தை ஆங்கிலத்தில் குறிப்பிடல் வேண்டும்.



# பரிசுப் போட்டி - 1

கேள்விகள் 1,2,3, களுக்கு பெண்கள் விடை அனுப்ப வேண்டும்.

கேள்விகள் 4,5,6, களுக்கு ஆண்கள் விடை அனுப்ப வேண்டும்.

சிறந்த விடைகளை அனுப்பியவர்களுக்கு 5 ரூபா வீதம் மொத்தம் ஆறு பரிசுகள் வழங்கப்படும்.

(1) ஆண்கள் எதை விரும்புவதில்லை?

(2) ஆண்கள் எதற்கு எளிதில் அடிமை ஆகி விடுகிறார்கள்?

(3) ஆண்கள் கோபம் .....

(4) பெண்கள் எதை விரும்புவதில்லை?

(5) பெண்கள் எதற்கு எளிதில் அடிமை ஆகி விடுகிறார்கள்?

(6) பெண்கள் கோபம் .....

பரிசுப் போட்டி - 1
பிரவேசப் பத்திரம்
பெயர் :-..........
விலாசம் :-..........
..........
..........கையொப்பம்

# பரிசுப் போட்டி - 2

(1) அண்ணாத்துரை முதன் முதலில் கதை, வசனமெழுதிய படம் என்ன?

(2) ஜெமினி கணேசன், சரோஜாதேவி இருவரும் சேர்ந்து நடித்த முதல் படம் என்ன?

(3) 'கலைமன்னன்' என்ற பட்டம் எந்த நடிகருக்கு சூட்டப்பட்டது?

சரியான விடைகளை அனுப்பியவருக்கு 5 ரூபா ரொக்கப் பரிசு வழங்கப்படும்

பரிசுப் போட்டி - 2
பிரவேசப் பத்திரம்
பெயர்:-..........
விலாசம்:-..........
..........
..........கையொப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலைநாட்டிலிருந்து

மலைநாட்டு மக்களின் கலை கலாச்சாரங்களை பிரதி பலிக்க கூடிய அம்சங்கள் இப்பகுதியில் இடம் பெறும். ரோஜா வின் மனம் நாடும் மலை நாட்டு வாசகர்கள் இப்பகுதிக்கு தாராளமாக தங்கள் கருத்துக்களை எழுதலாம். ஆ-ர்:

மலை, உயிர்களின் வாழ்க்கைக்குத் தாயகம் என்று சொல்லலாம். உயிர்களின் வாழ்க்கைக்குரிய பல வற்றை மலை வழங்குகிறது. கா்டடர்ந்த பசுமலை கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கின்றது. அந்த விருந்து உடலையும் உயிரையும் வளர்க்கிறது. காடு மக்கள் வாழ்க்கைக்கு மிகவும் பயன் படுகின்றது. கொண்டல்கள் தவழ்ந்து தேங்கி மழை பொழிவதற்கு காடு துணை புரிகின்றது. காடு தெய்வம் போன்று நாட்டைக் காத்து வருவதால் அதனை வனதேவதை என்று பாலர்கள் போற்றலானார்கள் ; இத்தகைய காட்டை அணிந்திருப்பது மலை

மலையிலிருந்தே ஆறுகள் ஓடிவருகின்றன. ஆறுகள் இயற்கை அன்னையை அழகு செய்கின்றன ஆறுகள் நாட்டிற்கு விளைவையும் வளத்தையும் கொடுக்கின்றன. மலையிலேயே மருத்துவ மூலிகைகள் வளர்கின்றன. பொன், வெள்ளி முதலிய உலோகங்களையும் பலதிற மணிகளையும் மலையே வழங்குகின்றது.

பரந்து வானளாவ நீண்டு உயர்ந்து ஓங்கி நிற்கும் ஒன்றே எங்கும் பரந்து நிற்கும் ஒன்றினை நினைவை ஊட்ட வல்லதாகும். உலகில் உயர்ந்து ஓங்கி நிற்பது மலை ஒன்றை

ஆழ்ந்து சிந்திக்கின்றவன் முகம் வான்நோக்கி நிற்பதைக் காண்கின்றோம். துன்பத்தால் பீடிக்கப்பட்ட ஒருவன் தலைசாய்ந்து கீழ் நோக்கி நிற்பதையும் பார்க்கிறோம். மேல் நோக்க நோக்க அறியாமை இருள் அகன்று அறிவு தெளிவு பெறும். அறிவு தெளிவான் நோக்க வேண்டிய் பாலது இதனாலேயே ''உள்ளுவ எல்லாம் உயர்வு உள்க'' என்றார் வள்ளுவனார் உயர்ந்த நோக்கு கடவுள் உணர்வுக்கு அடிப்படை மலையிலிருந்தே கடவுள் உணர்வும் பிறந்திருக்கின்றது. மலையில் வாழ்ந்து அங்கேயே கடவுள் உணர்வைப் பெற்றனர் மக்கள் அதனாலேயே மற்றைய இடங்களில் குடிபுகுந்தபோதும் மக்கள் மலையை மறவாமல் மலையை நினைவூட்டும் உயரிய கோபுரங்களை வைத்து கோயில்கள் கட்டினார்கள். கோபுரங்கள் மலைபோல் உயர்ந்த நினைவை ஊட்டுவதாகும்.

### சமயப் பெரியார்களும் மலைகளும்

கடவுள் நெறியை நிலை நாட்டிய பெரியார்கள் மலையுடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர். பிறப்பில் உயர்வு, தாழ்வு, இல்லையென்றும் அறநெறியை நிலை நாட்டிச் சென்ற கௌதம புத்தர் மலை சூழ்ந்த இடத்திலேயே பிறந்துள்ளார். கௌதமர் உண்மை உணர வேண்டி மலைகளிலும் காடுகளிலும் திரிந்தே புத்தரானார். இறுதியில் நிர்வாணம் அடையும் போது புத்தர் உண்ண நேர்ந்த கிழங்கும் உலகில் உயர்ந்த மலையாகிய இமயச்சாரலில் விளைந்ததாகும்.

அன்பே கடவுள் என்று உலகுக்கு அருளி யேசு கிறீஸ்தும் மலை பிரதேசத்திலேயே பிறந்தார். மலை மீது அமர்ந்தே தவங் கிடந்தார் அவர் உருமாறப் பெற்றதும் மலையிலேயே. அவர் மலையில் அருளிய பொன் மொழிகளே சுவிசேஷத்தின் உயிர் நாடியாகும். அவர் உருவம் மறைந்ததும் மலையிலேயே. இயேசுவின் வாழ்வுக்கும் மலைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஆண்டவன் ஒருவனே அவன் பிறப் பிறப்பு இல்லாதவன். உருவமற்றவன் என்பதை உலகில் நிலை நாட்டிய நபி நாயகத்தின் வரலாற்றிலேயும் மலைத் தொடர்புண்டு. மலைக்குகையிலேயே தெய்வ அருள் பெற்றார். மலைக்குகையிலேயே நன் மொழிகள் அருளியுள்ளார்.

க. கார்த்திகேசு

## தமிழரும் - மலையும்

தமிழ் முனிவர்கள் பலரும் மலையிலேயே வாழ் நாளைக் கழித்துள்ளனர். பல முனிவர்கள் பெயர்கள் மலையின் பெயர்களாகவே இருக்கின்றன. உதாரணமாக பன்றி மலை சுவாமி என்பது மலையையே குறிக்கின்றது. தமிழர் ஆண்டவனை ''மலைக்கிழவோன்'' என்றும் குன்று தோன்றுவோன் என்றும் மலை மகன் என்றும் கூறு வதிலிருந்தும் தமிழர் மலைத் தொடர்பு விளங்குகின்றது தமிழ் மொழி கூட மலையில் பிறந்தது என்று கூறுபவர் இதற்குச் சான்றாக ஒரு கவிஞர் பாடியுள்ள தமிழ்த்தாய் வாழ்த்து நினைவிற்கு வருகின்றது.

''பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத் (து)
இருப்பிலே இருந்து வைகை
ஏட்டிலே தவழ்ந்த பேதை''

தமிழர்கள் மலை நினைவின் பொருட்டே கோபுரங்கள் கட்டினார்கள் காவியங்கள் எழுதினார்கள். ஓவியங்கள் வரைந்தார்கள். அத்துடன் மலை சென்று திரும்ப ஆசைப் பட்டார்கள். மலைமேல் ஏறி இறங்கினால் எத்தனையோ நலம் விளையும் என்பதை அறிந்தார்கள். இதனால் மலையில் கோயில்கள் கட்டி விழா எடுத்தனர். திருப்பதி திருவண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலை, திருக்கழு குன்றம், பழனி, இவைகள் இவ்வாறு அமைந்தவைகளே. திருப்பதி ஏழு மலைகளையுடையது. நமது ஈழ நாட்டிலும் உள்ள சிவனொளி பாதமலை மலையுச்சியில் அமைந்துள்ள ஆலயமாகும். அதே நேரத்தில் கதிர்காமம் சென்று திரும்புபவர்கள் கதிர்காமத்தில் உள்ள ஏழுமலைகளில் ஒன்ருன சுவாமி மலை என்றழைக்கப்படும். மலைக்கு ஏறி இறங்குகின்றனர். இதில் இருந்து அறியப்படுவது யாதெனில் மலையுடன் தொடர்பு கொண்டு வாழவேண்டும் என்ற போது நோக்கம் கொண்டு வாழ்த்துள்ளனர் என்பதாகும் வாழ்விற்கு புற அமைதியையும் அக அமைதியையும் நல்குவது மலையே. நம் தமிழ்ப் பண்டைப் புலவர்கள் மலையின்பத்தை நன்கு உணர்ந்து அனுபவித்தே குறிஞ்சிக் கலி, திருமுரு காற்றுப் படை முதலிய இலக்கியங்களை தோற்றுவித்துள்ளனர். என்ருல் மலையின் பெருமை தான் என்னே.

மலை வாழ் மக்கள் திருவீடையர் அவர்களின் திருவை

"தேனும் செந்தினை இடிகளும் தீஞ்சுவைக்கனியும்
ஊனும் துய்ப்பன உடுப்பன மறவுரி தழைகள்
வானுந் தோய்சுனை ஆடுவ மணிவரை இருப்பு
ஏனந் சூழ்ந்த குன்றவர் கொடு நல் குரவின்றே"

என்று கச்சியப்ப முனிவர் தணிக்கை புராணத்தில் குறிப்பிட்டுள்ளார். தமிழ் சைவ பெரியார்களான அப்பர் சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள், காரைக் காலம் அம்மையார் ஆகியோரும் மலைகளுடன் தொடர்பு கொண்டு வாழ்ந்துள்ளதை நாம் அறிய முடிகின்றது.

மனிதராகப் பிறந்த நம்மிடம் மனிதச் செயல்கள் வேண்டும். மனிதச் செயல் என்ன? மற்றவருக்குப் பயன் கருதாது பணி செய்தல் "எண் கடன் பணி செய்து கிடப்பதே" இதற்கு மலைகள் எடுத்துக் காட்டாக நிற்கிறது. மலைகள் போல் மனிதன் மற்றவர்களுக்கு பயன் பட வேண்டும். துணை செய்தல் வேண்டும். மலைகள் பொழியும் ஆறுகள் போல் மனிதன் கருணைப் பொழிதல் வேண்டும். மலை நாட்டு மக்களாகிய நாம் படைக்கும் கலைகள், காவியங்கள், ஓவியங்கள் மலைகள் போல் உயர்ந்திருக்க வேண்டும். உயர்ந்தவைகளையே படைப்போம். மலைகளுடன் அதிக தொடர்பு கொண்டவர்கள் நாம் நமக்கே மற்றவர்களை விட உயர்ந்ததை எண்ணவும் படைக்கவும் முடியும்.

கலைகள், காவியங்கள், ஓவியங்கள் படைக்கத் தேவை அமைதி, அமைதி, அமைதி நம் பெருஞ் செல்வம் அழியாச் செல்வம் மலைச் செல்வம். அமைதியை நமக்கு நல்கும் அந்த மலைகளை இரு கரங் குவித்து வணங்குவோம் வாருங்கள்.


Ceylon Malayan Rubber Goods Ltd. advertisement:

For Quality SINWA For Durability
For Fashion SINWA For Value
For Moderate Price SINWA For Latest Designs

SINWA
CANVAS SHOES
available throughout the island

SHOES

For the entire family
SINWA
shoes are best

Manufactured by
Ceylon Malayan Rubber Goods Ltd.
DEHIWALA.

Thai Ceylon Jewel Company advertisement:

Remember !

FOR YOUR REQUIREMENTS IN

★ ANTIQUES ★ JEWELLERY
★ GEMS ★ BATIKS

THAI CEYLON JEWEL COMPANY
TOURIST SHOPPING CENTRE
BENTOTA

Phone 243 Bentota
414 / 415 Galle


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ROJA-Registered as a newspaper in Ceylon


ON ALL OCCASIONS

*for your requirements in*



★ Sarees

★ Readymade Garments

★ Suitings

★ Shirtings

★ Sarongs

*Why not go to:-*

MODERN DRAPERY STORES

( Established 1904 )

128, Main Street,
GALLE.

Phone 407


Published by M. S. M. Mafahir residing at 199/1, Dangedara Road, Galle and Printed at Ariyadasa Printers 69, Dangedara Road, Galle.

Managing Editor:- M. S. M. Mafahir

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org